செய்தி வெளியீடு எண்:58/ 2024 நாள்:21.08.2024

# செய்தி வெளியீடு

**அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் திரு.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் குடிநீர் வாரிய அலுவலர்களுக்கு புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு (GIS – Geographic Information System) மேலாண்மை மையத்தின் செயல்பாடுகள் குறித்த பயிலரங்கத்தினை இன்று (21.08.2024) தொடங்கி வைத்தார்.**

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் திரு.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள்,தலைமை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் பகுதிப் பொறியாளர்களுக்கு புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு (GIS – Geographic Information System) மேலாண்மை மையத்தின் செயல்பாடுகள் குறித்த பயிலரங்கத்தினை இன்று (21.08.2024) தொடங்கி வைத்தார்.

இப்பயிலரங்கினை தொடங்கி வைத்து அரசு செயலர் தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.08.2024 அன்று சென்னை குடிநீர் தலைமை அலுவலகத்தில் ரூ.17 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு மேலாண்மை மையத்தினை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

குடிநீர் வாரியத்தின் கட்டமைப்புகளை புவியிடம் சார்ந்த தகவல்களோடு சேகரித்து அதனை நிருவாகிப்பதற்கு ஏதுவாக இம்மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் உள்ள காணொளி திரை (Video Wall) முலம் வாரியத்தின் கட்டம்மைப்பின் விவரங்களை வரைபடத்துடன் முழுமையாக பார்வையிடுவதற்கு ஏதுவாகவும், பராமரிப்பு பணிகளின் விவரங்கள் மற்றும் புதிய குடிநீர்/ கழிவுநீர் கட்டமைப்புகளில்

மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரங்கள் உடனுக்குடன் update செய்யப்படும்.

இந்த விவரங்களை எந்த இடத்தில் இருந்தும் செல்போன்கள் மூலம் பார்த்திட முடியும். இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சென்னை பெருங்குடியில் உள்ள தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். மேலும் இதன் பிரதி (copy) திருச்சியில் உள்ள தரவு மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும். இம்மையத்தில் திரவுகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்படுவதால், குடிநீர் வாரிய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் செயல்திறனை மேம்படுத்தவும் தக்க முடிவுகளை உரிய நேரத்தில் எடுக்கவும் முடியும். இதன் மூலம் பொது மக்களுக்கு துரிதமான சேவைகள் வழங்கிட முடியும். இம்மையத்தின் பயன்பாட்டிற்காக 5 நில அளவை கருவிகள் (DGPS – Differential Global Positioning System) மற்றும் 22 காந்தப்புல கண்டுபிடிப்பான் கருவிகள் (Magnetic Locators) வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வரைப்பட அமைப்பு துறையிலிருந்து (Survey of India) பெறப்பட்ட தரைமட்ட அளவுகளை ஆதாரமாக கொண்டு செயற்கை கோள் அமைப்பின் மூலம் நிலை அளவை முறையில் 75 தரைக்கட்டுப்பாடு புள்ளிகள் (Ground Control Points) சென்டிமீட்டர் அளவிலான துல்லியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. குடிநீர் கட்டமைப்பில், நீர் ஆதாரங்களில் இருந்து வீடு வரையில் உள்ள கட்டமைப்பு மற்றும் வீட்டு வளாகத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வரையில் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் போன்றவைகளும், 1 லட்சத்தி 50 ஆயிரம் இயந்திர நுழைவாயில்களும், 7268 கி.மீ. தூரம் அளவிலான குடிநீர் குழாய்களும், 4659 கி.மீ. தூரம் அளவிலான கழிவுநீர் குழாய்களும், 356 கழிவுநீர் உந்து நிலையங்கள், 129 குடிநீர் பகிர்மான நிலையங்களின்விவரங்கள்துல்லியமாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.இத்தரவுகள் அனைத்தும் 159 அடுக்குகளை கொண்ட ஒரு வலுவான புவித்தரவு தளவுமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணிகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள செயலியில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கண்டிப்பாக

பதிவேற்றம் செய்ய வேண்டும்.இது தொடர்பான அனைத்து விவரங்களும் அலுவலர்களுக்கு தெரிவிப்பதற்காக இப்பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து நிலை அலுவலர்களுக்கும் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும் குடிநீர் வாரியத்தின் அன்றாட செயல்பாடுகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து மேற்கொள்வது மூலம் பொது மக்களுக்கு தரமான சேவையினை வழங்கிட முடியும் என்பதை கருத்தில் கொண்டு அலுவலர்கள் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப, செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., பொறியியல் இயக்குநர் திரு.எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமை பொறியாளர்கள் திரு.இரா.சிவமுருகன், திரு.ஆர்.கந்தசாமி, திரு.இரா.கண்ணன், மேற்பார்வை பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள் உட்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

••••••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu